# சிவசக்தி '94

# SIVASAKTHI



ROYAL COLLEGE HINDU STUDENTS' UNION

ஓம் சக்தி



ஆத்தாளை எங்கள் அபிராம வல்லியை அண்டமெல்லாம்

பூத்தாளை மாதுளம்பூ நிறத்தாளைப் புவியடங்கக்

காத்தாளை அங்குச பாசாங்குசமுங் கரும்பும் அங்கை

சேர்த்தாளை முக்கண்ணியைத்தொழுவார்க் கொரு தீங்கில்லையே.

# சமர்ப்பணம்



கலைத்தாய் கண் திறப்பாள்
    கல்விக்கு உயிர் தருவாள்.
நினைப்பால் உள்ளத்தில்
    நீக்கமற நினைந்திருப்பாள்
உரைப்பதற்கு வார்த்தை
    தந்த உத்தமிக்கு- இம்மலரை
பக்தியொடு பக்குவமாய்
    பாதத்தில் வைக்கின்றோம்.

# றோயல் கல்லூரி

இந்து மாணவர் மன்றம் கலைத்தாய்க்கு கிரீடமேற்றி
பெருமையுடன் வழங்கும்.

# கலைமகள் விழா 1994.

| | | |
|---|---|---|
| காலம் | : | புரட்டாதித்திங்கள் |
| | : | புதன்கிழமை 26ம் நாள் (12.10.1994) மாலை 4.30 மணி |
| இடம் | : | நவரங்கஹல மண்டபம், றோயல் கல்லூரி |
| பிரதம விருந்தினர் | : | திரு. எஸ். நல்லையா. எம் .ஏ (கல்வியியல்) |
| | | (பிரதிக் கல்விப் பணிப்பாளர்- மேல்மாகாணம்) |
| கௌரவ விருந்தினர் | : | திரு. பி. சூரியாராச்சி. |
| | | (அதிபர், றோயல் கல்லூரி,கொழும்பு) |
| சிறப்புப் பேச்சாளர் | : | வித்துவான் திருமதி. வஸந்தா வைத்தியநாதன். |

# ROYAL COLLEGE

***HINDU STUDENTS' UNION***
***PROUNDLY PRESENTS***

## "KALAIMAGAL VIZHA 1994"

| | | |
|---|---|---|
| **DATE** | : | *On Wednesday the 12th of October at the NAVARANGAHALA* |
| **TIME** | : | *AT I6.30 Hours.* |
| **CHIEF GUEST** | : | ***MR. S. NALLIAH, M.A. EDU.*** |
| | | *(Deputy Director of Education - Western Province)* |
| **GUEST OF HONOUR** | : | **MR. B. SURIARACHCHI** |
| | | *(Principal, Royal College, Colombo)* |
| **GUEST SPEAKER** | : | **VIDWAN. (MRS.) VASANTHA VITHYANATHAN.** |

# சிவசக்தி
# SIVASAKTHI
# 1994




## இதழாசிரியர் குழு — EDITORIAL BOARD.

| | | |
|---|---|---|
| **தலைமை இதழாசிரியர்** | : | **CHIEF EDITOR:** |
| மொஹமட் அஷ்ரப் ஆஷிக் | : | MOHAMED ASHROFF AASHIQUE |
| **துணை இதழாசிரியர்கள்** | : | **SUB EDITORS:** |
| குலசிங்கம் பிரசன்னா | : | KULASINGHAM PRASENNA. |
| தாரங்கன் பக்தசீலன் | : | DHARANGAN BAKTHASEELAN |
| செல்வநாயகம் ஜூலியன் றொஷான் | : | SELVANAYAGAM JULIAN ROSHAN. |



**வெளியீட்டாளர்**

றோயல் கல்லூரி

இந்து மாணவர் மன்றம்





**PUBLISHED BY.**

ROYAL COLLEGE

HINDU STUDENTS' UNION.

# இறை வணக்கம்

"அகர முதல எழுத்தெல்லாம் - ஆதி
பகவன் முதற்கே உலகு"

திருக்குறள்

## *கணபதியை கை கூப்புவோம்.*

தும்பி முகத்தானே! துணையா வந்தெனக்குத்
தம்பியின் புகழுதுவே தளர்வின்றிப் பாடிடவே
நம்பியேன் பணிந்திட்டேன்! நலமாக அருள் தந்து
வம்பெதும் வாராது வழியளித்துக் காத்திடுவாய்

## *சிவசக்தி*

சக்தியும் சிவமுமாய் தன்மை இவ்வுலகமெல்லாம்
ஒத்தொவ்வா ஆரும் பெய்ரும் உணர்குண குணியுமாகி
வைத்தனன் அவளால் வந்த ஆக்கமிவ் வாழ்க்கை எல்லாம்
இத்தையும் அறியார் பீட இலிங்கத்தின் இயல்பு மோரார்.

## *துர்க்கை*

முள்செயலுங் காட்டி அவை புரக்கு மூவரைத் தன்
இச்சையிற் காட்டி அவருளத்தும் எட்டாயால்
பச்சையிளங்குதலைத் கிள்ளாய் பரையே நின்
விச்சையிவை யென்றால் விடுத்துணர வல்லாரார்.

## *இலக்குமி*

பொன்னரசி நாரணனார் தேவி புகழரசி
மின்னுநல ரத்தினம் போல் மேனி அழகுடையாள்
அன்னையவள் வையமெல்லாம் ஆதரிப்பாள் சிறீதேவி
தன்னந் திரு பொற்றாளே சரண் புகுந்து வாழ்வோமே!

## *சரஸ்வதி*

வாணி கலைத்தெய்வம் மணிவாக் குதவிடுவாள்
ஆணி முத்தைபோல அறிவுமுத்து மாலையினால்
காணு கின்ற காட்சியதாய் காண்பதெல்லாம் காட்டுவதாய்
மாணுயர்ந்து நிற்பாள் மலரடியே சூழ்வோமே!

# SCHOOL OF OUR FATHERS

## (Words and Music by the Late Major H.L.Reed)

1. Thy Spirit first to life awoke
In eighteen hundred and thirty-five
Beneath the sway of Marsh and Boake,
Thenceforth did Lanka's leaning thrive.

## Refrain

School where our fathers learnt the way before us,
Learnt of books and learnt of men, through thee we'll do the same.
True to our watchword "Disce aut Discede"
We will learn of books and men and learn to play the game.

2. Within thy shades our fathers trod
The path that leads to man's estate;
They have repaid the debt they owed
They kept thy fame inviolate.

3. And we their loyal sons bear
The torch, with hearts as sound as oak;
Our lusty throats now raise a cheer
For Hartley, Harward, Marsh and Boake.

## MESSAGE FROM THE PRINCIPAL, ROYAL COLLEGE

This year too the Royal College Hindu Students' Union has organised their annual "Kalaimagal Vizha" and I am happy to contribute a message for publication in their Souvenir, titled "Sivasakthi", issued to mark the event.

The H.S.U. has successfully implemented their programme of work with great enthusiasm and this event is by way of a culmination to their years activities. Aesthetic appeals are not limited by any barriers and I have no doubt the items in this cultural presentation will find appeal in one way or another among the whole audience.

While thanking Mr. A. Shanmugalingam the Master in charge, and all others concerned for their efforts in organising this Kalaimagal Vizha, I wish the occasion itself all success.

**B. Suriarachchi**

Principal, Royal College.

With Best Compliments
From

☆

# ARASAN PRINTERS

☆

30, HYDE PARK CORNER,
COLOMBO-2.
*Phone: 326482, 422393*

*சுற்றத்திற் கழகு சூழ விருத்தல்*

# பிரதம அதிதி அவர்களின் ஆசிச் செய்தி.

கொழும்பு றோயல் கல்லூரி இலங்கையில் திகழும் ஒரு பாடசாலையாகும். தமிழ், சிங்களம் ஆகிய இரு மொழிகளிலும் கல்வி இடம் பெறல் இக்கல்லூரியின் சிறப்பானதோர் அம்சமாகும். நீண்டகால வரலாற்றுப் பின்னணியையுடைய இப்பாடசாலை தொடந்தும் முன்னனியில் திகழ்வதால் மக்களின் அதிகூடிய கவர்ச்சிக்குட்பட்ட ஒரு பிரபல்ய பாடசாலையாக விளங்குகின்றது.

இக்கல்லூரியில் மாணவமன்றங்களின் செயற்பாடுகள் பாடசாலையை உயிர்த்துடிப் துடிப்புள்ளதாக்குகின்றன. இவ்வரிசையில் இந்து மாணவர் மன்றம் கடந்த பல ஆண்டுகளாக அதன் கல்வி செயற்பாடுகளை சிறப்பாக ஆற்றி வருகின்றது. ஆண்டு தோறும் கலைமகள் விழாவை விமரிசையாக நடாத்தி சிவசக்தி என்னும் மலரையும் வெளியிட்டு வருவது முக்கியமான நிகழ்வாகும்.

சமுதாயப் பொருத்தப்பாட்டை உருவாக்கும் வகையில் பாடசாலைக்கல்வி இடம் பெற வேண்டுமென்பது கல்வியியலாளர்கள் கருத்தாகும். மாணவர் தத்தம் சமயநெறி நின்று ஒழுகும் போது இயல்பாகவே பொருத்தமான சமூக நடத்தை உருவாகும். இதற்கு பாடசாலை நிகழ்ச்சிகளில் சமய நிகழ்வுகளும் முக்கிய இடம் பெறவேண்டும். இவ்வித கல்விச் சூழல் கொழும்பு றோயல் கல்லூரியில் காணப்படுவது குறிப்பிடப்பட வேண்டும்.

அதிபர் திரு. பி. சூரியாராச்சி அனுபவமும். ஆற்றலும், முதிர்ச்சியும் மிக்கவர். இவரது தலைமையில் தமிழ், சிங்களம் ஆகிய இருமொழிகளிலும் கல்வி இடம் பெறுவது ஏனைய பாடசாலை அதிபர்களுக்கு முன்மாதிரியானது. தமிழ்ப் பகுதித் தலைவர் திரு. வி. சிவானந்தநாயகம் தனது பகுதியை திறம்பட நெறிப்படுத்தி வருகிறார். இந்து மாணவர் மன்ற பொறுப்பாசிரியர் திரு.அ. சண்முகலிங்கம் இம்மன்ற வளர்ச்சியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்தியுள்ளார். இவர்கள் அனைவரும் பாராட்டுக்குரியவர்கள்.

நவராத்திரி விழாவை இந்து நெறிக்குரிய விழாவாகமட்டும் கொள்ள வேண்டியதில்லை. மனித சமூகங்கள் அனைத்திற்கும் ஏற்புடைத்தான தத்துவப் பொருளை இவ்விழா குறிக்கின்றது. மனிதன் தன் வாழ்வை முறையாக அமைத்துக் கொள்வதற்கு வேண்டிய விடயங்களை முக்கியப் படுத்துவதாக இவ்விழா அமைகின்றது எனக் கொள்வதே பொருத்தமானது. மனிதனின் சமூகவாழ்விற்கும், ஏன் ஆன்மீக வாழ்விற்கும் கூட வீரம், கல்வி, பொருட் செல்வம் ஆகியவை அவசியமானவை. இவற்றுள் ஏதாவது ஒன்று குறைந்தாலும் கூட வாழ்வு அர்த்தமுள்ளதாக இருக்காது. முழுமையானதாக அமையாது. மனிதன் ஒரு சமூகப் பிராணி, அல்லது சமூக அங்கத்தவன் என்ற வகையில் இவை முக்கியமாகின்றன. இம்மூன்று விடயங்களையும் பெண் தெய்வங்களாக உருவகப்படுத்திய இந்துநெறி நவராத்திரி விழாவை வகுத்துள்ளது. எனினும் இவ்விழா இந்து நெறியைப் பின்பற்று வோருக்குமாத்திர மன்றி அனைத்து மக்களுக்கும். ஏற்ற விழா எனக் கொள்ளல் அறிவு பூர்வமானது.

கொழும்பு றோயல் கல்லூரி மாணவர்கள் இயல்பாகவே உடற்றிறனாற்றலும் உள ஆற்றலும் மிக்கவர்கள். விளையாட்டுக்களிலும் உடற்பயிற்சியிலும் கல்வியிலும் இவர்கள் காட்டும் ஆர்வம், வெளிப்பாடுகள் என்பவை இதற்குச்சான்றாக உள. இவற்றினூடாக இமமாணவா பொருட்டு செல்வத்தையும் ஈட்ட முடியும்.

இவை இவ்விழாவைக் கொண்டாடுவதன் குறிக்கோள்களாக அமைய வேண்டும். நவராத்தி விழாவும் சிவசக்தி எனும் மலர் வெளியீடும் சிறப்புற அமைய எனது உளமார்ந்த வாழ்த்துக்கள்.

**எஸ். நல்லையா எம். ஏ (கல்வியியல்)**

**பிரதிக் கல்விப் பணிப்பாளர்,மேல்மாகாணம்**

*With Best Compliments*
*From*

ORIGINAL

# LISTERINE

ANTISEPTIC MOUTH WASH
FIGHTS BAD BREATH
KILLS GERMS
REDUCES PLAQUE
**GAMMA**

Marketed by
Gamma Pharmaceuticals (Pvt) Ltd
307, Darley Road,
Colombo-10.

RAMAKRISHNA MISSION
Ceylon Branch
40, RAMAKRISHNA ROAD,
COLOMBO-6
Phone: 588253
4.10 .94

# வாழ்த்து மலர்

உலக சமயங்கள் இறைவனைப் பலவாறாகப் போற்றி வணங்குவதை நாம் அறிவோம் ஆனால் அப்பரம்பொருளை உலகநாயகியாகவும், உலக அன்னையாகவும் கண்டு வழிபடுதல் என்பது இந்து சமயத்தின் தனிச்சிறப்பாகும். சென்ற நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்த ஸ்ரீராம கிருஷ்ண பரமஹம்சரும் ஒரு சிறந்த தேவி பக்தர்.அவரை போன்று, பல ஞானிகள் இறைவனை உலக அன்னையாகக் கண்டு போற்றி வாழ்ந்துள்ளனர்.

உலக இயக்கத்திற்கும், மனித இயக்கத்திற்கும் அடிப்படையாக இருக்கும் சக்தியை, கலைமகள், அலைமகள், மலைமகள், என்று முப்பெரும் தேவிகளாக வழிபடுவதே நவராத்திரியின் சிறப்பு.

"நமது உடலை இயக்குபவள் அவளே; நமது புலன்களை அடக்கி ஆள்பவள் அவளே; நமது அறிவாக இருந்து வாழ்க்கையில் ஒளியூட்டுபவளும் அவளே" என்று அன்னை பராசக்தியின் பெருமையை நமது சமய நூல்கள் பாடுகின்றன.

எனவே நமது வாழ்க்கையின் ஆதாரசக்திகளாக விளங்கும் ஆதிபராசக்தியை உணர்ந்து கொள்ளாது, அகங்காரம், மமகாரங்களுக்கு அடிமைப்பட்டு வாழ்வதால்தான் வாழ்க்கையில் பல இன்னல்களை அனுபவிக்க நேரிடுகிறது. நவராத்திரியின் ஒன்பது நாட்களும் சும்பன் ,நிசும்பன் மஹிஷாசுரன், தூம்ரலோகன் போன்ற பல அசுரர்களோடும் கடுமையாகப் போரிட்டு , முடிவில் அவர்கள் அனைவரையும் ஆதிபராசக்தியானவள் முற்றாக அழிக்கிறாள் என்று நமது சமய நூல்கள் கூறுகின்றன.இதன் உட்பொருளாவது, நமது உள்ளத்திலே குடிகொண்டிருக்கும் கோபம், பொறாமை, வெறுப்பு போன்ற அரக்கர்களை வென்று அங்கு அமைதியையும் சாந்தத்தையும் தேவியானவள் நிலைநாட்டுகிறாள் என்பதே.

எனவே இந்த ஒன்பது நாட்களும் அவளைப்போற்றி வணங்குவதன் மூலம், அவள் நமது உள்ளத்திலே குடிகொண்டு, அங்கு வதியும் அரக்க குணங்களை வீழ்த்தி சகல நலன்களையும் வழங்குவாள் என்பதே நவராத்திரியின் நோக்கம்.

வேத்தியர் கல்லூரி இந்து மாணவர் சங்கம் நடத்தும் கலைமகள் விழா மாணவர்களது உள்ளத்திலே இறைபக்தியையும் ஒழுக்கத்தையும் நிலைநாட்டும் வண்ணம் அமையும் என்று நினைக்கிறோம்.

அவர்கள் வெளியிடும் விழா மலருக்கு எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சுவாமி ஆத்மகணாநந்தா

With Best Compliments
From

# MARCO TEX

*Dealers in Textiles*

147/22, Keyzer Street,
Keyzer Plaza Market,
Colombo - 11
Tel: 335297

*செய்தவ மறந்தால் கைதவ மாளும்*

உ

ஓம் சக்தி

# கொழும்பு றோயல் கல்லூரி
# இந்து மாணவ மன்றப் பொறுப்பாசிரியரின் ஆசியுரை

எமது இந்து மாணவர் மன்றம் தனது 39 ஆவது ஆண்டு நிறைவைப் பூர்த்தி செய்யு முகமாகவும் கல்வித் தெய்வம் அன்னை கலைவாணிக்கு விழா எடுக்கும் பெரு முயற்சிக்கு மன்றப் பொறுப்பாசிரியர் என்ற வகையில் ஆசிகூறுவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

எமது கல்லூரியின் மாணவச் செல்வங்களின் ஆக்கங்களை இதழ்களாக விரிக்கும் சிவசக்தி மலரை கலைவாணிக்குச் சூட்டி எம்மாணவ மணிகளின் அறிவுச் சுடரும் திறன்களும் மனப்பாங்குகளும் உலகெல்லாம் பிரகாசிக்க எல்லாம் வல்ல சக்தியை உளமாரப் பிரார்த்திக்கின்றேன்.

எமது மன்றப் பணிகள் இயல், இசை, நாடக, துறைகளுக்கு மகுடம் சூட்டும் தமிழ் இலக்கிய, கர்நாடக இசை, நாடக மன்றங்களின் மனமொருமித்த ஒத்துழைப்புடனும் ஆசியுடனும் எம்மதமும் சம்மதம் என்ற சுவாமி விவேகானந்தரின் ஆத்மீக கொள்கை வழி நின்று சகோதர மதங்களின் மன்றங்களின் ஒத்துழைப்புடனும் ஆசியுடனும் நிறைவேற்றப்படுவது கண்டு ஆத்ம திருப்தியடைகின்றேன்.

எதிர்வரும் கல்வி ஆண்டுகளிலும் எமது பணிகள் மேலும் சிறக்கவும், "பழையன கழிதலும் புதியன புகுதலும் என்ற மொழிக்கு ஒப்ப காலமும் கருத்தும் மாறுவதற்கு சகோதர மன்றங்கள் வழிசமைத்து யாவும் புது மெருகும், பொலிவும், சக்தியும் பெறவும், அன்னையின் அருளை வேண்டி பாதக் கமலங்களை வணங்குகின்றேன்.

**"எம் கடன் பணி செய்து கிடப்பதே"**

நன்றி!

**அ. சண்முகலிங்கம்**
**சிரேஷ்ட உப தலைவர்**

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★
★★★★★★★★★★★★★★★★★★
★★★★★

**With Best Compliments**
**From**

# PRASANTHI EXPORTS

★★★★★
★★★★★★★★★★★★★★★★★★
★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

# மாணவத்தலைவனின் உள்ளக் கணைகள்

கல்வி பயிலும் மாணவர்களாகிய நாம் கலைகளுக்கு ஊற்றாகிய கலைவாணிக்கு விழா எடுத்து முத்தமிழால் முடிசூட்டுவதில் மட்டற்ற உவகையடைகிறோம். எம்முன்னோர் இட்டுச்சென்ற பணியை எவ்வித களங்கமுமற்ற முறையில் முன்னெடுத்துச் செல்ல அருள் பாலித்த கலைவாணிக்கு நாம் சிரம் தாழ்த்தி இரு கரம்கூப்பி எமது நன்றியறிதலை இத்தருணத்தில் செலுத்துகின்றோம்.

றோயல் கல்லூரி இந்து மாணவர் மன்றம் என்னும் சோலையில் மொட்டு விரித்துள்ள சிவச்சக்தி என்னும் இவ்வாடா மலரை இந்நாளில் உங்கள் கைகளில் தவழவிடுவதில் பெருமைகின்றோம். இல்லிழ் மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகெல்லாம் எனும் எமது இலட்சியத்தை ஏய்துவதற்கு நாம் அமைத்த ஒரு படிக்கல்லாகும்.

இவ்வினிய மாலைப்பொழுதில் இவ்விழாவை இனிதே மேடையேற்ற சகலவழிகளிலும் எமக்குத் தோள் கொடுத்து ஒத்தாசை புரிந்த சகமாணவர்களுக்கும், எமது ஆக்கத்திற்கு ஊக்கத்திற்கு ஊக்கமளித்த ஆசிரியர்களுக்கும், விசேடமாக இறைபணியே தன் பணி எனக் கொண்டு செயற்பட்ட பொறுப்பாசிரியர் அவர்களுக்கும், எமது சகல முயற்சிகளையும் வாழ்த்தி வழிநடத்திய மதிப்பிற்குரிய அதிபர் அவர்களுக்கும் எமது உள்ளத்தில் பொங்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். நெல்லுக் கிறைத்த நீர் வாய்க்கால்

வழியோடிப் புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம்

தொல்லுலகில் நல்லா வொருவர் இருப்பின்

அவர் பொருட் டெல்லோர்க்கும் பெய்யும் மழை

என்பதற்கிணங்க குறைந்த. எண்ணிக்கையுடைய மாணவர்களைக் கொண்டும் அயராது இயன்றளவு நிறைவாக நாம் எடுக்கும் இவ்விழாவின் மூலம் எல்லோருக்கும் ஆக்கமும், ஊக்கமும், அருளும் எல்லாம் வல்ல அன்னை தருவாளாக.

முப்பத்தெட்டு மைல்கல் கண்ட றோயல் கல்லூரி இந்து மாணவர் மன்றம் இன்னும் எண்ணற்ற மைல்கற்களை காண்பதற்கு எல்லாவல்ல இறைவன் அருளும், அன்பர்கள் உங்கள் நல்லாசியும் என்றும் எம்மேல் பொழியும் என்ற நம்பிக்கையுடன் பிரியாத விடை பெறுகிறேன்.

வாழ்க சைவ நீதி!
வளர்க எம்நற் பணி!

**க. கங்காதரன்**
(மாணவர் தலைவன்)

*With Best Compliments*
*From*

☆
☆
☆
☆☆☆
☆
☆
☆

**N. PALANIYANDY**

# Sree Sai Traders

**Distributor For Hemas Marketing Products**

*57-1/1, WOLFENDHAL STREET,*
*COLOMBO - 13.*
*TEL: 23002*

# இதழாசிரியர்களோடு ஒரு நொடி ..................

**"ஓம் பவனா பவஸ்து, பவனம் புனக்து
கரவைஹம் தமாமவைஹ்"**

அஞ்ஞான பேதமையை ஒழித்து மெஞ்ஞான தீபம் ஏற்றும் எம் அன்னை சரஸ்வதியின் பாதக் கமலங்களிற்கு இம்மலரைக் காணிக்கையாய் இடுவதையிட்டு இந்நூலின் இதழாசிரியர்கள் என்ற வகையில் இளைய தலைமுறையினர் நாம் இன்புறுகிறோம். அதேசமயம் இன்றைய காலகட்டத்திற்கு தேவையான சிலவற்றையும் கூறலாம் என்பது எம்மூவரின் தணியாத இதய தாகமாக உள்ளது.

உலகம் தோன்றியது முதல் மனிதனும் அவனது மதங்களும் தோன்றின. இம்மதங்களுக்கு எவ்வாறு கருத்துக்கள் தோன்றினவோ அவ்வாறே கருத்துமுரண்பாடுகளும் தோன்றின. இக்கருத்து முரண்பாடுகளின் தணியாத வேட்கைக்குப் பலியானது மனிதனேயன்றி வேறல்ல. எனவே, ஒவ்வொரு மனிதனும் தன் மதத்தை அனுஷ்டிக்க வேண்டும். அதேசமயம் மதத்தில், மதங்கொள்ளலாகாது.

எமது கல்லூரி மன்றத்தினைப் பொறுத்தவரையில் இங்கு யாதொரு பேதமையும் கிடையாது "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" - இதுவே எம் தாரக மந்திரம். மதரீதியான முரண்பாடுகள் பேதமைகள் நீங்கி அனைவரும் ஒன்றாய் வாழ எம்போன்ற மாணவ சமுதாயத்தினர் மத்தியில் ஒற்றுமை தோன்ற வேண்டும். அவ்வாறான மதரீதியான ஒற்றுமைக்கு இதுபோன்ற விழாக்களும் மலர் வெளியீடுகளும் வழிகோலும் என நாங்கள் நிச்சயமாக நம்புகின்றோம்.

ஒரு நூற்றாண்டுக்குமுன் சிக்காகோ பேருரையில் சுவாமி விவேகானந்தர் ஆற்றிய உரையில்: "மனித இனம் மதங்களின் மூலம் ஒன்றிணைய வேண்டும் மதங்கள் பிரிந்தவைகள், பிரிந்தவைகள் இணையவும், இணைந்தவைகள் சிறக்கவும் மனிதனே உதவவேண்டும் இதன் மூலம் சமயங்களின் உலகப்பாராளு மன்றம் தோன்ற வேண்டும்" என்று குறிப்பிட்டார். இவ்வுரை எம்மத்தியில் எத்தனை பேருக்கு நினைவிருக்கின்றது என்பது கேள்விக் குறி.

அதே தருணம் சுவாமி அவர்களின் இலட்சியக் கனவு நனவாக நாம் அனைவரும் ஒன்றுபட்டு உழைப்பது அவசியமாகிவிட்டது.

இவ்வாறான மதங்களின் மூலமான ஒற்றுமை, சகோதரத்துவம், சகிப்புத்தன்மை, விட்டுக்கொடுத்தல், ஒருவருக்கொருவர் உதவுதல், மன்னித்தல் போன்ற அறநெறிகள் பின்பற்றப்படாமையே இன்று பல பாபரி மசுதிகளும், இராமர் கோயில்களும் இடிக்கப்படக் காரணமாய் இருக்கிறது. இனிமேலாவது ஆறுமுகமும், அப்துல்லாவும், அந்தோணியும், அமரசிறியும் ஒன்றிணைந்து புதிய சமுதாயத்தை உருவாக்குவோம். நம் அனைவருக்கும் அன்னை சரஸ்வதியின் அருட்கடாட்சம் கிட்டுவதாக.

**வாழ்க தமிழ்மொழி!**
**வளர்க சைவநெறி!**

**துணை இதழாசிரியர்கள் :**

**குலசிங்கம் பிரசன்னா**
**செல்வநாயகம் ஜுலியன் றொஷான்**

**பிரதம இதழாசிரியர் :**

**மொஹமட் அஷ்ரப் ஆஷிக்**

**With Best Compliments**
**From**

# Kotahena Pharmmacy

79, BONJEAN ROAD,
COLOMBO-13. Tel : 432022

With Best Compliments
From

## ARTON EXPORTS (PVT) LTD
**EXPORTERS**

F 39, 1st Floor,
People's Park Complex
Colombo-11

T. Phone : 434643
Fax : 94 -1- 436629
Telex: 23294 EAROP CE
Res : 331961

# KALAIMAGAL VIZHA '94

## ORGANIZING COMMITTEE



**SEATED LEFT TO RIGHT** : K.Naresh Kumar (Secretary ,Tamil Literary Union) , V.Manoharan (Student Chairman,Tamil Literary Union), S.J.Roshan (Sub Editor), M.A.Aashique (Chief Editor) , K.Gangatharan (Student Chairman) , S.Jeyanthan (Secretary) , P.Sravanaguhan (Treasurer) , P.Ajanthan (Asst.Treasurer) , Rodney L.R. Balasingham (Student Chairman,Tamil Dramatic Society) , P.Satheesh Kumar (Secretary ,Tamil Dramatic Society)

**STANDING FIRST ROW** : P.Ramesh , A.Haridha ran , D.Bakthaseelan (Sub Editor) , E.Kesavan , K.Prasenna (Sub Editor) , D.R.S.Selvendra , L.Jeyanthan , R.Satheesh Barathan , M.Prathapan

**STANDING SECOND ROW** : J.P.Dayan , G.S.Sethukaavalar , G.E.Sanjeeve , P.Babu

**ABSENTEES** : G.Anandaraja (Vice Student Chairman) , T.Ranjan (Joint Secretary) , K.Bahavathur (Joint Secretary),S.Sathiesh, T.Caminus, M.S.I.Nawas, H.M.M.Riyal, R.M.Shaffi

With Best Compliments

From

✦
✦
✦

AAS

*S.D. Gurunathan*
Managing Partner

## A. A. Singhe Traders

Wholesale Dealers in Rice & Ceylon Produce

No. 5, St.John's Road,
Colombo-11.
Tel: 431927

43,Sri Sangamitta Mawatha,
Colombo-13.

With Best Compliments
From

# New Nithiyakala

## Jewellers

*(ALL ORDERS EXECUTED PROMPTLY)*

19, SEA STREET,
COLOMBO - 11.

Telephone: 447111

தந்தை சொல் மிக்க மந்திரமில்லை

*With Best Compliments*
*From*

# MAIYURA TEXTILES

**149, Keyzer Street,**
**Colombo-11.**
**T.Phone: 324060**

# செயலாளரின் சிந்தனைதுளிகள்.

"சக்திபின்னமிலான் எங்கள் பிரான்" என்று எங்கள் பிரான் சிவனுடன் பிரிவின்றி கலந்து சகல ஜீவராசிகளிற்கும் அருள்பாலிக்கும் சக்தியின் பெருமைகளுக்கு முடிசூட்டுவது போல் வேத்தியர் கல்லூரி மாணவர்களால் முப்பத்தி ஒன்பதாவது ஆண்டாக கொண்டாப்படும் கலைமகள் விழாக்காண விழைந்து வந்திருக்கும் பெரியோர் சகோதரர் அனைவருக்கும் எனது அன்பு கனிந்த வந்தனங்கள்

இற்றைக்கு முப்பெத்தெட்டு வருடங்களுக்கு முன் வேத்தியர் கல்லூரி இந்து சமய மாணவர்கள் தம் மதம் மீது கொண்டிருந்த பற்றினை மேலும் மெருகூட்டும் வகையில் ஆரம்பிக்கப்பட்ட இந்து மாணவர் மன்றத்தின் வரலாற்றில், வண்ணமிட்டுமின்ன இன்னொரு நன்னாளில், இரண்டறக் கலந்துவிட்ட சிவமும், சக்தியும்போன்ற இணைபிரியாமல் கலைமகள் விழாவும், சிவசக்தி மலரும் இளையோர் இவர்களின் கலைத் திறமைகளின் கருவூலமாய் கலைவாணியின் முன் காணிக்கையாக்கப்படுகின்றன.

கலியுகத்தில் இருபத்தியொராம் நூற்றாண்டை நோக்கி நடை போடும் இக்காலத்தில் அந்தணன் தொடக்கம் பாமரர்வரை இறைவன் பற்றிய சிந்தனை சிறுகச் சிறுக அருகிக் கொண்டு செல்கின்றது என்பது எவரும் மறைக்கமுடியாத உண்மை. இந்நிலையை மாற்றி புதுமலர்ச்சிகான சிறியோர் யாம் எமது இயலுமைக்கு இயன்றவாறு எம்மதத்திற்கு தொண்டு செய்ய ஆர்வமாயுள்ளோம். எமது முயற்சியின் விளைவாக வருடாந்தம் நடாத்தப்படும் கலை மகள்விழாவை முனனைய வருடங்களிலும் சிறப்பாக நடாத்த திர்மானித்துள்ளோம். எமது ஆர்வத்திற்கும், முயற்சிக்கும் எமது மன்ற பொறுப்பாசிரியரின் குன்றாதபணிகள் எமக்குள் உற்சாகத்தினை நல்கியுள்ளது.

இறுதியாக குறுகிய காலத்திற்குள் குன்றா முயற்சியுடனும், குறையா உழைப்புடனும் இவ்விழாவினை சிறப்புடன் இனிதே நடத்த சிரத்தையுடன் எமக்கு வழிகாட்டிய மன்ற பொறுப்பாசிரியர் உட்பட ஏனைய ஆசிரியர்களுக்கும், வேற்றுமைகளை மறந்து தோளோடு தோள் நின்று துணைபுரிந்த சகோதர மத மாணவர்களுக்கும், சகோதர மன்றங்களுக்கும் விழாவின் சிறப்பே நடாத்த உதவிய அனைவர்க்கும் கோடி நன்றிகள் நல்கி, எம்மன்றம் பல்லாண்டு காலம் நீடுழி வாழ்ந்து இதுபோன்ற இன்னும் பலவிழாக்கள் விமரிசையாகக் கொண்டாட எம் கருணைமிக்க வாணியின் அருளை வேண்டி நிற்கின்றேன்.

நன்றி.

**மேன்மைகொள் சைவநீதி விளக்குக உலகமெல்லாம் !**

**ச. ஜெயந்தன்** ,
செயலாளர்
**இந்து மாணவர்மன்றம்.**
றோயல் கல்லூரி
கொழும்பு 7

With Best Compliments
From

UNION TEXTILES IND (PVT) LTD

233/3 Hekitta Road,
Wattala.

நுண்ணிய கருமமு மெண்ணித் துணி

# Message from the Royal College Buddhist Brotherhood

★★★

The Hindu Students' Union of Royal College celebrates it's 39th anniversary this year. I sincerely congratulate you and warmly welcome "Sivasakthi'94" the annual publication, which is issued to mark the occasion.It is with great pleasure that I contribute this message to it.

Maintaining a very high degree of religious cultural and racial harmony in any task assigned, is a noteworthy constituent of Royalists. It is undoubtedly essential and a duty to continue this reputation even in the years to come. I would appeal to members of all religious societies in the College to establish even closer ties for their own good and that of our College.

I wish the Hindu Students' Union all success in their endevours.

"May the Triple Gem bless you all"

**R.L.Samaranayake**
Senior Vice President
Buddhist Brotherhood

*With Best Compliments*
*From*

# CHEMICAL INDUSTRIES
# (COLOMBO) LTD.

CIC HOUSE,
199, KEW ROAD,
COLOMBO

கிட்டா தாயின் வெட்டென மற.

# Message from the Royal College Islamic Society

★★★

The Hindu Students' Union of Royal College is celebrating "Kalai Magal Vizha" it's much awaited programme of the year. It is with great pleasure that the Islamic Society of Royal College contributes this message to the "Sivasakthi'94" on this memorable occasion.

The Hindu Students' Union, which includes a variety of programmes in it's calendar, co-operates with other religious bodies of the college when ever it's assistance is required.

We the members of the Islamic Society congratulate the Hindu Students Union on this occasion and we extend our hand of friendship and goodwill to make this event a success.

**M.H.M. Farouk.**

**Senior Vice President,**
**Royal College Islamic Society.**

With Best Compliments
From

**iris**

Iris Colour Graphics Limited

*David Jeyaraj*
Director

☆☆☆☆☆

**95, Cotta Road**
**Colombo 8,**
**Sri Lanka**

Phone : 699219, 686579, 698366
Telex : 22307,22308,EWB CE
Fax : (+94 1) 698433

iris

எண்ணு மெழுத்துங் கண்ணெனத் தகும்

Royal College

# Message from the Royal College Students' Christian Movement

★★★

Once again the time has come for the Students' Christian Movement to convey a message to the annual 'Kalaimagal Vizha'

The interest taken by the Hindu Students' Union of Royal College, in organising this annual religious festival is very encouraging. It is very important that every child should be taught to give priority to one's religion, thus enabling him to lead a life according to one's religious teachings.

On behalf of the Students' Christian Movement we extend our good wishes to the Hindu Students' Union on this occasion, and hope they continue the good work in the future.

**Mrs.K.R. Wickramaratne.**
Teacher-in Charge
Students' Christian Movement.

With Best Compliments
From

✦
✦
✦
✦

*ANYTHING.............*
*ANYTIME.............*
*ANYWHERE...........*

With 3000 offices worldwide in 192 Countries

**TNT** Skypak
EXPRESS WORLDWIDE
*For a Friendly Service! Call 326308, 447644, 330585/6.*

**TNT** Mail Fast
INTERNATIONAL MAILING

## *ACE XPRESS*

LOCAL INTERCITY DELIVERY SERVICE

| | | | |
|---|---|---|---|
| Tel: | Head Office | : | 447644 |
| | Fort | : | 327861 |
| | Ratmalana | : | 725757 |
| | Biyagama | : | 571755 |
| | Katunayake | : | 452945 |
| | Kandy | : | 08-32731 |
| | N' Eliya | : | 052 3072 |

**ACE CARGO** (PVT) LTD
315, Vauxhall Street,
Colombo-2,
Sri Lanka.
Tel: 445331, 432776, 328799,
327254, 330585, 330586
Fax: 445589
Tlx: 21788 AIRACE CE

A MEMBER OF AITKEN SPENCE

# போதும் மனிதா!

போதும் மனிதா போதும்-நீ செய்த
பாதகம் போதும் போதும்
காதும் கண்ணும் வாயும்- சொல்லும்
தத்துவம் அறிய வேண்டும்

காதால் தீயதைக் கேட்காதே - நீ
கண்ணால் தீயதை பார்க்காதே-
வாயால் தீயதை சொல்லாதே- இது உன்
வாழ்வில் உதவும் தத்துவம்.

ஆக்கம்
**பா. இராஜ் பிரகாஷ்**
ஆண்டு -7Q
றோயல் கல்லூரி.

With Best Compliments
From

# LEARN TO WELD AT

# CEYLON OXYGEN LIMITED

Arc & Gas welding
Quality for a lucrative job in Sri Lanka or Abroad

**Duration - One Month**
**Course Fee - Rs. 3950/- (approx)**
For further details, please contact

*CEYLON OXYGEN LIMITED*
*MARKETING DIVISION*
*50, SRI PANNANANDA MW.,*
*COLOMBO-15.*

**Tel: 524381-3/524731/524738**

பிறன்மனை புகாமை யறமெனத் தகும

# "அறிவளிக்கும் தேவி"

அறிவினை அள்ளி அளித்திடும் தேவி
ஆதியந்த மில்லாக்கலை தந்திடும் தேவி
இல்லங்கள் யாவிலும் இலங்கிடுந் தேவி
ஈடிணையில்லாவிசை மீட்டிடுந் தேவி

உலகினை யியக்கிடும் உன்னதத் தேவி
ஊக்கமுள்ளோருக்கருள் தருந் தேவி
எங்கும் நிறைந்திடும் நற்கலைத் தேவி
ஏழையிவன் துதிக்கும் எழில்மிகு தேவி

ஐம்பொறி யடக்கியே அழைப்பீ ரவளை
ஒளி மிகு வாழ்வினைத் தருவாள் அவளே!
ஓயா மனத் துயர் தீர்ந்திடப் பாடிட
ஔடதமளிப்பாள் அருங்கலைத் தேவி!

ஆக்கம்
**நிலக்ஷன் சுவர்ணராஜா**
ஆண்டு 13 Sc A

Dance Recitals by Student's of
Kalasuri
Dr.( Mrs.) Vasugy Jegatheeswaran
Nee Shanmugampillai
Director of **NATYA KALA MANDIR**

**Programmes**

1. MALLARI
   Ragam : Gambeera Naatai
   Thalam : Aadhi

2. SHIVASTAKAM
   Ragam : Mohanam
   Thalam : Kando Nattai

**Followed by**
DEVATHA VANDHANAM
Ragam : Ragamaligai
Thalam : Thalamaligi

**The Participants of the Programmes**
Miss. Shanmugapriya Kanagasabapathy
Miss. Duvaaraga Paramasamy
Miss. Sangeetha Maduraiweeran

---


With Best Compliments
From

Shaheera's

IMPORTERS & GENERAL MERCHANTS
DEALERS IN FANCY GOODS
**A.J. WASSIL**
(Managing Partner)

S-37, 1st FLOOR,
COLOMBO CENTRAL,
SUPER MARKET COMPLEX,
COLOMBO-11, SRI LANKA

T.Phone : 423373, 431735
Fax : 941-1-421432

# நவாலியூர் களையோடை கண்ணகி அம்மன் ஆலயம்

இலங்கையில் பல வரலாற்றுச் சிறப்புமிக்க ஆலயங்கள் உண்டு அவற்றுள் நூலுருவிலும் பலரால் அறியப்பட்டும் உள்ளன. ஆனால் சில கோவில்கள் சிலரால் மட்டுமே அறியப்பட்டும் அவற்றின் புகழ் மேன்மை அனேகருக்குத் தெரியாமலும், இருந்து வந்துள்ளன. அவ்வகை ஆலயங்களில் ஒன்றே நவாலியூர் களையோடை கண்ணகி அம்மன் ஆலயம் இவ்வாலயம் தோன்றியது எப்போது? என்றோ, இதன் வரலாறு எப்போது ஆரம்பிக்கப்பட்டது? என்றோ வரையறுத்துக் கூறமுடியாது.

இவ்வாலயம் நான்கு பக்கமும் நெற்காணிகளினால் சூழப்பட்ட அழகிய புதுமைமிக்க ஆலயமாகத் திகழுகின்றது. இதன் பெருமைக்கு சூழ உள்ள விருட்ஷங்களும், முக்கியத்துவம் வாய்ந்த ஒரு கிணறும், சிறு மண் குன்றிலுள்ள ஆலயமும் ஆகும். இவையே இவ்வாலயத்தின் தொன்மை வரலாற்றையும் விளக்குகின்றது.

இவ்வாலயம் இங்கு அமைவதற்கும் காரணமாக இருந்த சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சி ஒன்று உண்டு என இவ்வூர் மக்கள் பேசிக் கொள்வார்கள். நெற்காணிகளில் அறுவடை முடிந்ததும் அவ்விடத்தில் பசுக்களைக் கூட்டம் கூட்டமாக மேய்ப்பார்கள். அதன்படி ஒரு சிறுவன் மாடு மேய்த்துக் கொண்டு திரிந்தான். ஒரு நாள் அச்சிறுவன் பகல் நேரம் மரங்கள் நிறைந்த இடத்தில் களையாறப் போனான். அப்போது அங்கே ஓர் வயது போன ஆச்சி இருந்தார். அவர் சிறுவனிடம் தனக்குத் தாகமாக இருப்பதாகவும் குடிக்கத் தண்ணீர் தரும்படியும் கேட்டார். அதற்கு அச்சிறுவன் இங்கு கிணறுகள் இல்லையே அம்மா நான் எப்படி உங்களுக்குத் தண்ணீர் தரமுடியும். என்று கேட்டான். அதற்கு அவர் அவனது கையிலுள்ள தடியை அவ்விடத்தில் ஊன்றினால் தண்ணீர் வரும் என்றாராம். இதைக் கேட்ட சிறுவன் ஆச்சரியத்துடன் தடியை ஊன்ற தண்ணீர் வந்தது. அவனும் ஆச்சியும் குடித்தார்கள். பின்னர் ஆச்சி மறைந்து விட்டாள்.

அவன் சிறுவன் தானே வீடு செல்லும் போது அந்நிகழ்ச்சியை மறந்து விட்டான். ஆனால் அன்றிரவு அச்சிறுவன் கனவில் அவள் தோன்றி தான் கண்ணகி அம்மன் என்றும் அதே இடத்தில் ஒரு கோவில் அமைத்து வணங்கும்படியும், இக் கிணற்று நீர் எல்லா வகையான நோய்களையும் தீர்க்கும் மருந்து என்றும் கூறினார். மறுநாட்காலை சிறுவன் நடந்த நிகழ்ச்சிகளை எல்லோருக்கும் கூறினான். எல்லோரும் சென்று அவ்வதிசயத்தைப் போய்ப்பார்த்து அவ்விடத்தில் சிறிய கொட்டில் ஒன்று போட்டு அம்மனை வழிபடத் தொடங்கினார்கள். அம்மன் களையாற வந்தபடியாலும் அவ்விடத்தில் ஒரு நீர் நிலையை ஏற்படுத்திய படியாலும் "களையோடை கண்ணகை அம்பாள்" என்ற திருநாமம் வழங்குன்றது.

இங்கு வாழும் மக்கள் மதுரையை எரித்த கண்ணகி அக்களைப்புடன் வந்து இங்கே தாகம் தீர்த்ததாக இன்றும் நம்புகிறார்கள் இங்கு கண்ணகி களையுடன் வந்து அமர்ந்த சிறு மணற்குன்று முற்று முழுவதும் நெற்காணிகளினால் சூழப்பட்டுள்ளது. இக்காட்சி சொல்லினால் வர்ணிக்கமுடியாத அழகான காட்சியாகும் இம்மணற் குன்றில் வழிபாடு நடத்தப்பட்ட பின்புதான் கோயில் மூலஸ்தானத்துக்குப் பூசை நடைபெறுகிறது. மூலஸ்தானத்தில் அவரின் காற்சிலம்பு ஒன்றும் இடம் பெறுவது ஏனைய ஆலயங்களில் காணப்படாத சிறப்பம்சமாகும்.

இவ்வாலயத்திற்குச் சொந்தமான 300 பரப்பு நெற்காணிகள் உண்டு இங்கு தினசரி மூன்று நேரப் பூசையும் மார்கழித் திருவெம்பாவை, தைப்பூசம், பங்குனித் திங்கள், சித்திரைப் பௌர்ணமி போன்ற தினங்களின் விசேட அபிஷேகங்களும் நடைபெறுகின்றன. அத்துடன் ஆடி மாதத்தில் வரும் ஆடிப்பூர உற்சவம் மிகவும் சிறப்பாக நடை பெறுகின்றது விசேட அபிஷேகங்களும், பூசைகளும் அன்னதானசபை ஒன்று கூடி அன்னதானமும் நடைபெறுகின்றன. இங்கு மந்திரங்கள் சொல்லாது மௌனமாகவே பூசை நடை பெறுகின்றது.

கண்ணகை அம்மனைத் துதித்து அவரது அருளும் ஆசியும் பெற்றோர் பலர் நாமும் துதிப்போம்.

- தி. றஞ்சன் 13 CD

*With Best Compliments*

*From*

✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵

☆

# *SAREES SANGAMAM*

***Dealers***

***in***

***Textiles***

☆

**31/2 , PLAZA COMPLEX,**
**GALLE ROAD,**
**COLOMBO - 6**

மத்திய பிரிவில் முதலாம் இடம்பெற்ற கட்டுரை;

# நவராத்திரி விழாவின் பெருமைகள்

கல்தோன்றி மண்தோன்றாக்காலந்தொட்டு முன்தோன்றிய முதல் மதம் இந்து மதம். இதிலே ஐந்து வகை உண்டு. சைவம், சாக்கதம், சௌமாரம், வைணவம், சௌரம் என்பன அவை. இவற்றிலே சாக்தத்தில் சக்தியை முதலாகக் கொண்டு வழிபடுவர். இவை இன்று பல இடங்களில் சைவத்துடன் கலந்து அனுட்டிக்கப்படுகிறது. இந்த அண்ட பிரபஞ்சத்திலே சூரியனைச் சுற்றி கோல்கள் அசைகின்றன. புவியிலே இடி இடித்து மின்னல் பாய்ந்து தாரை தாரையாக மழைபொழிகிறது. வயலிலே வளம் செழிக்கிறது. இவற்றிற்கெல்லாம் காரணம் ஓர் சக்தியே! இச்சக்தியையே பெண்ணாகக்கொண்டு இப்பூவுலகத்தில் விழா எடுக்கின்றனர். அவ்விழாவே நவராத்திரி விழா.

சிவனன்றி சக்தியில்லை சக்தியின்றி சிவனில்லை என்பர். ஆனால் சிவனுக்கு ஓர் இரவு சக்திக்கு ஒன்பது இரவு. இதிலிருந்து சக்தியின் பெருமையை அறியலாம். ஐப்பசிமாத சுக்கிலபட்ச திதி தொடங்கி ஒன்பது நாட்கள் இவ்விழா கொண்டாடப்படும். சில இல்லங்களில் கொலு வைத்து வழிபடுவது வழக்கம். சக்தி வீற்றிருக்க ஓர் தூய்மையான தலத்தில் கும்பம் வைத்து மலரால் அலங்கரித்து விளக்கேற்றி வழிபடுவர்.

முதல் மூன்று நாளும் வீரத்தினதும் ,வெற்றியினதும் அதிபதியான மலைமகளுக்கும்; அடுத்த மூன்று நாளும் செல்வத்தினதும், சிறப்பினதும் அதிபதியான திருமகளுக்கும்; இறுதி மூன்று நாளும் கல்வியினதும், கற்றறிவினதும் அதிபதியான கலைமகளுக்கும்; இந்துக்கள் விமரிசையாக விழா எடுப்பர். முதல் மூன்று தினம் வழிபடும் நாயகி மலைமகளுக்கு மனிதனனின் துர்குணங்களை அகற்றுவதால் துர்கை எனவும், விக்கினங்களை தகர்தெறிவதால் விக்னேஸ்வரி எனவும், பெண்களின் மாங்கல்யத்தை பாதுகாப்பதால் கன்னிகை எனவும் போற்றப்படுகிறாள். மனிதனை மறைத்துள்ள ஆணவம், கன்மம், மாயை என்பவற்றை விரட்டி மனிதனின் ஆன்ம ஈடேற்றத்திற்கு வழியமைக்கும் அன்னையே இந்த மலை மகள். துஷ்டர்களை அழித்து, நல்லோர்களை அணைத்து காக்கும் அன்னையே இந்த மலைமகள். இப்படிப்பட்ட இந்த சக்தியை போற்றி வணங்கினோர் வாழ்வில் வெற்றி பெறுவர்.

திருவின் நாயகி திருமகளுக்கு இலக்குமிதேவி, செல்வநாயகி என பலபெயர்களுண்டு. ஏழைகளின் வாழ்வில் பொன்னொளி ஏற்றி வளம் பெறச்செய்வாள். ஆணிரை, மகவுடன் நல்லகம் தந்து இல்லறம் செய்ய வழிவகுப்பாள். இளமையுடன் வாழ அருள்வாள். நாட்டின் வளத்தை ஊட்டுவாள். பாலையை பசுமையாக்கும் இந்நாயகியை வழிபட்டோர் வாழ்வில் வளம் பெறுவர்.

கல்வியின் திரு, கல்விகரசி என போற்றப்படும் தேவி கலைமகளுக்கு சரஸ்வதி எனும் திருப்பெயர் உண்டு. சங்க காலத்திலே நதிககளுக்கு சரஸ் என அழைப்பர். ஆகவே எம் வாயிலிந்து முடிவின்றி நதியாகப்பாயும் சொல்லுக்கு இறைவியான கலைமகளை சரஸ் உள்ளவல் அதாவது சரஸ் வதி என அழைப்பர். கல்வியின் சிறப்புக்கு தேவி சரஸ்வதி, இவள் ஊமையையும் பாடச்செய்வார். கம்பர் நாமகளை ஆய கலைகள் அறுபத்திநான்கையும் கற்றுணர்ந்தவள் என போற்றுகின்றார். அக்காலப் புலவர்கள் சரஸ்வதியை தெய்வமாகப் போற்றினர். உலகின் கலைநதிகளை வற்றாமல் காக்கும் இக்கலைமகளை வணங்குவோர் வாழ்வில் வளம்பெறுவர்.

நவராத்திரியில் இந்த முத்தேவியரின் அருளை பெற்றோர் வாழ்வில் சகல சௌபாக்கியங்களையும் பெற்று ஏதும் குறைவின்றி வளமோடு வாழ்வர். நவராத்திரியின் மறுநாள் அதாவது பத்தாம் நாள் விஜயதசமி கொண்டாப்படும்.சரஸ்வதியின் அருள்பெற சிறியோர் ஏடுதொடங்கி அல்லது பெரியோர் ஆயுத பூசை செய்வர். இதிலிருந்து சக்திகளின் உருவான மலைமகள், கற்பகத்தரசி திருமகள், கலைமகள் ஆகியோரை நவராத்திரியில் வழிபாடுவோர் என்றுமில்லா இன்பம் பெறுவர்

**ஓம் சக்தி**

**முற்றும்.**

*With Best Compliments*
*From*

★

# CHANDRA STORES

Importers, Exporters ,General Merchants
&
Wholesale Dealers

★

60, NEW MOOR STREET
COLOMBO-12

Phone: 448420 , 436108

With Best Compliments
From

# ABSOLUT JOY

**The Clothes Shop**

1A Dharmaraja Mawatha,
off Alfred house Ave ,
Colombo - 3 .

No 10,
First floor,
Liberty Plaza.

# PROGRAMME PARADE

* LIGHTNING OF OIL LAMP
* SARASVATHIE POOJA
* KADAVUL VANAKKAM
* WELCOME SPEECH
* VAANI ISSAI
* GUEST SPEAKER'S SPEECH
* DANCE
* PRINCIPAL'S SPEECH
* DRAMA (COMMERCE SECTION)

## INTERMISSION

* FRIENDLY DEBATE
* CHIEF GUEST'S SPEECH
* PRIZE GIVING
* VOTES OF THANKS
* SABTHASVARANGHEL
* DRAMA (SCIENCE SECTION)

(THERE MAY BE CHANGES IN THE PROGRAMME ORDER)

# ஈழத்துத் திருக்கோயில்களுக்கு ஒரு பயணம்

